## திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

# திருப்பதிக் கோவை

### தனியன்

ஓங்குந் திருவரங்கர் தாமுகந்த வொண்பதிகள்
மூங்கிற் குடியமுதன் முத்தமிழால் - நீங்காத
அன்பர்தமர் வாழ அருள்செய்த அந்தணர்கோன்
தன்பதுமத் தாளே சரண்.

1. பங்கயத் தோன்இக்கு வாகுவுக்குப் பண்டளிப்பப்
பொங்கு மயோத்திப் புரிசைநகர் -தங்கிச்

2. சிலநா ளினிதமர்ந்து தென்னிலங்கைக் கோமான்
குலம்வாழக் கொண்டேகும் வேலை-நவமார்ந்த

3. சென்னிவளவன் வளநாட்டுத் தெய்வநதிப்
பொன்னி நடுவு புளினத்துப் -பன்னரிய

4. இந்து மடுக்கரைக்கே யின்பமுற [1]வைத்தருளிச்
சந்தி செயக்கருதிச் சாருங்கால்-[2]முந்து

5. மருவார் பொழிற்குருகை மாறன்முத லானோர்
[3]திருவாய்மொழிச் சுருதிச் செய்யுட்கு-உருகா

6. '[4]யிரங்கா வெனவிரங்கா' யானிவனே வைகல்
வரந்தா வெனவிசைய மாற்றிப்-பரந்தாமன்

7. கோழி மயிலுடனே கோளரவின் மீதேறி
யூழி பயிலு முயோகுதுயில் -வாழி

8. திருவரங்கம்[1]கோயில் திருவாழ் [2]உறந்தை
தருவலரும்பூஞ்சோலைத் [3] தஞ்சை - [6] அருள்கலந்த

9. [4]அன்பில் [5]கரம்பனூர் அம்பொன்மதிள் [6]வெள்ளறை
தென்புள்ளம்[7]பூதங்[8]குடிதிருப்பேர்-அன்பால்

10. [7]அருந்தவர்சேர்[9]ஆதனூர் ஆதி[10]அழுந்தூர்
திருந்து[11]சிறுபுலியூர் [12]சேறை-பொருந்து

---

(பிரதிபேதம்) [1]வைத்து. [2]முந்தி [3]திருவாய்மலர்சுருதிச், [4]யரங்கா வென யிரங்காய், [5]யாணிவனே. [6]முருகலர்ந்த. [7] அருந் தவஞ்செயாதனூர்.

கண்ணி 5-6-ல் ''செய்யுட்-குருகா-அரங்கரவன் பாங்கா யானிவனே வைக, வரந்தா வெனவிசைய மற்றப்-பரந்தாமன் என்றிருந்த பாடமே பின் மூலத்திலும் பிரதிபேதத்திலும் உள்ளபடி மாறிப் பிழைபட்ட தென்று தோன்றுகிறது. (ப.ர்.)

11 தலைச்சங்க [13] நாண்மதியம் தண்டடங்க ளெங்குங்
குலைத்தெங்கு [1]சூழ்தென் [14]குடந்தை-நலத்தபுகழ்க்

12 [15]கண்டியூர்[16]விண்ணகரம் [17]கண்ணபுரம் கோயில்
எண்டிசையு மேத்து மெழில்[18]ஆலி-தெண்டிரைசூழ்

13 [19]நாகை[20]திருநறையூர் நந்திபுர [21]விண்ணகரம்
ஈகை மறவாத [22]இந்தளூர்-[2]யோகமணிச்

14 [23] சித்திரகூடம்காழிச் [24]சீராம விண்ணகரம்
கொத்தலரும் பூஞ்சோலைக்[25]கூடலூர்-முத்திதரும்

15 [26]கண்ணங் குடிகண்ண[27] மங்கை[3]கவித்தலம்[28]
திண்ணம் திரு[4] வெள்ளி[29]யங்குடி-எண்ணரிய

16 [5]நாங்கூர் மணிமாடக்[30] கோயில் நவையறுசீர்ப்
பூங்கா வளம்[31]பாடி [6]வண்புருடை[32]-[7]தேங்குபுனற்

17 செம்பொன்செய்[33]கோயில் திருத்தெற்றி[34] [8]யம்பலம்
[9]வம்புந்து [35]வைகுந்த விண்ணகரம் - உம்பர்

18 அரிமேய [36]விண்ணகரம் அம்பொன் [37]மணிக்கூடம்
பரன்மே வியபார்த்தன்[38] பள்ளி-[10]தருமாய்கை

19 [11]வெல்லுந் திருத்தேவ [39]னூர்தொகைவெள் [12] [40]ளக்குளம்
வள்ளல் வழுதி வள*நாட்டுத்-தெய்வத்

20 திருமாலிருஞ்சோலை தென்கோட்டி மெய்யம்
தருவாரும் புல்லாணி தண்கால்-திருமோகூர்

21 கூடல்அணி வில்லிபுத்தூர்*[4]கோலத்திருக்குருகூர்
தோடார் தொலைவில்லி*[5]மங்கலம்-மாடலருஞ்

22 சீவரமங் கைப்பதி *[6]தென்றிருப்பேர் சீவைகுந்தம்
பூவிலய னேத்தும் *[7]புளிங்குடி-நாவில்

23 வளர்ந்த புகழ்சேர் வரகுண மங்கை
குளந்தை குறுங்குடிதென் கோளூர்-விளங்கு

24 மலைநாட் டனந்தபுரம் வண்பரிசா ரம்சொற்
கலை*[8]நாட்டுங் காட்கரைதென் மூழி-சிலைநாட்டும்

---

(பி.ம்.) *தண்குடந்தை. [2]யோகுமலி. [3]கவித்தலமே. [4]வெள்ளியங்குடியே. [5]நாங்கை. [6]வண்புருடம். [7]தேங்குபுகழ்ச். [8].யம்பலமே. [9]வம்புந்தும். *[0]திருமுட்டம். *விள்ளுந். *[2]வெள்ளக்குளமே. *நாட்டிற்செல்வத். *[4]கோதில். *[5]மங்கலமே. *[6]தென்றிருப்பேர் வைகுந்தம். *[7]புளிங்குடியே. *[8]கலைநாட்டுக்.

25 தென்குட்ட [1]நாட்டுத் திருப்புலியூர் செங்குன்றூர்
பொன்குட்ட வாவிப் புகழ்நாவாய்-அன்புற்ற

26 வல்லவாழ் மன்னுதிரு வண்வண்டூர் வாட்டாறு
வில்லிவா ழும்புரிசை வித்துவக்கோடு-அல்லல்

27 அறுக்குங் கடித்தானம் ஆறன் விளைசீர்
பொறுக்கும் புகழ்த் தொண்டை நாட்டில்-எறிக்கும்

28 [4]அயிந்த்ரபுரம்[1]கோவலூர்[2]அம்பொன்மதிட் கச்சி
வியன்றிரு அத்தியூர்[3]வெஃகா[4]-குயின்ற

29 பரமேச [5]விண்ணகரம் [6]பாடகம் மாடத்
திரண்மேய சீர்த்திருத் [7]தண்கா-உரன்மேய

30 [8]நீரகம் [9]வேளுக்கை நிலாத்திங்கட்[10] [5]டுண்டம்சொற்
[11]காரகம் [12]கார்வானம் [13]கள்வனூர்-ஊரகமே[14]

31 மட்டவிழுஞ் சோலைசூழ் [15]எவ்வுள் மறை [6]பயிலும்
[16]அட்ட புயகரமா மாதிநகர்-சிட்டர்தொழ

32 [17]நின்றவூர் [18] புட்குழிநீடுதிரு [19]நீர்மலை
என்று மழகார்[20] இடவெந்தை-துன்று

33 [21] கடன்மல்லை யம்பொற் [8]கடிகைச்சிலம்பு[22]
[9]திடமாந்[23]திருவல்லிக் கேணி-வடவெல்லை

34 வேங்கடம் சாளக் கிராமம்[10]வியன்புரிசை
[11]நாங்காணி சேர்நயிமி சாரணியம்-தேங்கு12 புகழ்க்

35 கங்கைக்[13]கரைக்கண்டஞ் சீர்பத்திரி யாச்சிரமம்
சிங்கவேள் குன்றம் திருப்பிரிதி-பொங்கு[14]புகழ்

36 வைகுந்தம்[15]பாற்கடல் மாநீர் அயோத்திநகர்
[16]பொய்குன்றச் செய்மதுரைப் பொன்னகரம்-[17]மொய் குன்ரு

---

(பி.ம்.) [1]நாட்டில். [2]வில்லவாவும். [3]விற்றுவக்கோடு.
[4] 2,829-ம் கண்ணிகள். ஒரு பிரதியில்,

அயிந்திரபு ரங்கோவ லத்தியூர் வெஃகா
துயின்ற பரமே சுரவூர்-இயஞ்சேரும்
பாடக மாடகத்தின் பாவை மகிழ்ந்துறையும்
ஏடலருந்தாமரைக ளெந்நாளும்-மாடலரும்.

என்று காணப்படுகின்றன. [5]டுண்டமே. [6]பரவும். [7]நீர்மலையே. [8]கதிரினஞ்சேரும். [9]தடமார். [10]வியன்சேர். [11]நாங்கைநமி சாரணியம் நாளுமே. [12]புனல். [13]கரைக்கண்டங் காப்பதரிகாச்சிராமம். [14]புனல்: [15]பாற்கடலே. [16]பொய்குன்று சீர்மதுரைப் பொன்னகரம். [17]மெய்குன்ரு.

37 அண்டர்திரு வாய்ப்பாடி யாழ்கடல்சூழ் வண்டுவரை
தொண்டர் [1]குழாம் [2] சூழ்மிந்தத் தொல்பதிகள் - கண்டும்
38 [3]தொழுதும் வலஞ்செய்தும் சொல்லித் துதித்தும்
முழுது முணர்ந்தும் முறையே-எழுதுகலை
39 யோதியும் வேத முரைத்தும் உலகறியத்
தாதி னடிமை தலைநின்றும்-வேத
40 நிழலே சரண மென நினைந்து வாழ்வார்
கழலே நமக்குக் கதி.

[4]மின்னு திகிரி வலவன் விசும்பெங்கும்
பன்னு திருப்பதிகள் [5]பாவெல்லாம்-துன்னுகலை

[6]கற்றூர்கள் தொண்டர் கழற்கமலங் கால்பணியப்
பெற்றூர் பெருதார் பிறப்பு

---

(பி.ம்) [1] குழாஞ்சூழுந்தொல்பதிகள். [2] சூழுமித்தொக்பதிகள்.
[3] 38, 39, 40-ஆம் கண்ணிகள் ஒரு பிரதியில்,

38 தொழுது வலஞ்செய்து சொல்லித் துதித்து
முழுதுணர்ந்தோர் கூறு முறையே -எழுது
39 கலையோதிவேத முரைத்துக் கனிந்து
முலகறிய நாமடியோ மென்று-தலைநின்று
40 வாழ நினைவீர்கள் வம்மினோ! வம்மின்நம்-
மாழ்வார் சரணினைவீ ராம்.

என்றுள்ளன.

[4]மன்னு. [5]பாட்டெடுப்ப. [6]கற்றூரவர்கண்டீர் கழற்கமலம்.
[7] பிறந்து.

மண்ணிலரங்க முதல் வைகுந்த நாடளவும்
எண்ணுந் திருப்பதிநூற் றெட்டினையும்-நண்ணுவார்,
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்றலைமேற் பூ: (109)

ஈரிருப தாஞ்சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர்பதின் மூன்றுமலைநா டோரிரண்டாம்-சீர் நடு நா
டாறே டீரெட்டு தொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடென்றுக் கொள் (6)

இவை இங்கு கருதத் தகும் -நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி.